winmeen.com

# மூன்றாம் வார நடப்பு நிகழ்வுகள்

## நவம்பர் 2022

நவம்பர் 15-21

**1. இந்தியா, அண்மையில் எந்த அமைப்பின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிதியத்துக்கு $5 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்குவதாக அறிவித்தது?**

அ. சார்க்

**ஆ. ஆசியான் ☑**

இ. G20

ஈ. ஐஎஸ்ஏ

✓ ஆசியான்–இந்தியா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிதியத்துக்கு $5 மில்லியன் அமெரிக்க டாலர்களை கூடுதலாக வழங்கவுள்ளதாக இந்தியா அறிவித்தது. பொது சுகாதாரம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் திறன்மிகு விவசாயம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதை இந்தப் பங்களிப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆசியான்–இந்தியா அறிவியல் & தொழில்நுட்ப கூட்டாண்மையானது கடந்த 1996ஆம் ஆண்டில் ASEAN India S&T பணிக்குழு (AIWGST) நிறுவப்பட்டபோது அதனுடன் சேர்ந்து நிறுவப்பட்டது.

**2. 'தேசிய ஹைட்ரஜன் மிஷன்' தொடங்கப்பட்ட ஆண்டு எது?**

அ. 2002

ஆ. 2007

இ. 2010

**ஈ. 2021 ☑**



✓ இந்தியா அண்மையில் COP–27இல் காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாட்டில் (UNFCCC) நீண்டகால குறைந்த கரியமில வாயு ($CO_2$) உமிழ்வு மேம்பாட்டு உத்தியை சமர்ப்பித்தது. கடந்த 2021ஆம் ஆண்டில் தொடங்கி வைக்கப்பட்ட, 'தேசிய ஹைட்ரஜன் திட்டம்', இந்தியாவை பசுமையான ஹைட்ரஜன் மையமாக மாற்றுவதை நோக்கமெனக் கொண்டுள்ளது. 2025ஆம் ஆண்டுக்குள் பெட்ரோலில் கலக்கப்படும் எத்தனாலின் சதவீதத்தை 20%ஆகவும், மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிக்கவும் இந்தியா விரும்புகிறது.

**3. வன்முறையைப் போற்றும் ஆயுதங்கள் மற்றும் பாடல்களை பொதுவில் காட்சிப்படுத்துவதற்கு முற்றிலும் தடை விதித்து உத்தரவிட்டுள்ள மாநிலம் எது?**

அ. கேரளா

**ஆ. பஞ்சாப் ☑**

இ. ஜார்கண்ட்

ஈ. மேற்கு வங்காளம்



✓ பஞ்சாபின் ஆம் ஆத்மி கட்சியின் தலைமையின் கீழுள்ள அரசாங்கம் வன்முறையைப் போற்றும் ஆயுதங்கள் மற்றும் பாடல்களை பொதுவில் காட்சிப்படுத்துவதற்கு முற்றிலும் தடைவிதித்து ஆணையிட்டுள்ளது. பொதுக்கூட்டங்கள், மத வழிபாட்டுத்தலங்கள், விழாக்கள் அல்லது பிற நிகழ்ச்சிகளில் ஆயுதங்களை எடுத்துச்செல்லவோ அல்லது காட்டவோ முழுமையான தடை விதிக்கப்படும் என்றும் அந்த ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4. 2022 – டுவென்டி 20 உலகக்கோப்பை பட்டத்தை வென்ற அணி எது?**

**அ. இங்கிலாந்து ☑**

ஆ. ஆஸ்திரேலியா

இ. இந்தியா

ஈ. பாகிஸ்தான்



✓ மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நடந்த போட்டியில் பாகிஸ்தானை ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி இங்கிலாந்து இரண்டாம் முறையாக டுவெண்டி 20 உலகக்கோப்பை சாம்பியன்சிப்பை வென்றது. பென் ஸ்டோக்ஸ் ஆட்டமிழக்காமல் அரைசதம் அடித்து இங்கிலாந்து சாம்பியன் பட்டம் வெல்வதற்கு உதவினார். போட்டியின் ஆட்ட நாயகனாகவும், போட்டியின் நாயகனாகவும் சாம் குர்ரன் தெரிவானார்.

**5. 53ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவை நடத்தும் மாநிலம் எது?**

அ. மேற்கு வங்கம்

**ஆ. கோவா ☑**

இ. கர்நாடகா

ஈ. ஒடிஸா

✓ 53ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவானது 2022 நவம்பரில் கோவா மாநிலத்தில் நடைபெறவுள்ளது. சத்யஜித்ரே வாழ்நாள் சாதனையாளர் விருது ஸ்பானிஷ் திரைப்பட இயக்குநர் கார்லோஸ் செளராவுக்கு வழங்கப்பட உள்ளது. இந்நிகழ்வின், 'சிறப்புக் கவனம் பெறும் நாடாக' பிரான்ஸ் உள்ளது. நடுவண் ஒலிபரப்பு மற்றும் தகவல் தொடர்பு அமைச்சகத்தின் முனைவான, '75 கிரியேட்டிவ் மைண்ட்ஸ் ஆஃப் டுமாரோ'வின் இரண்டாவது பதிப்பும் இந்தத் திருவிழாவின்போது ஏற்பாடு செய்யப்படும்.

**6. SIMBEX என்பது இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே நடைபெறும் கடல்சார் இருதரப்புப் பயிற்சியாகும்?**



அ. இலங்கை

ஆ. ஸ்வீடன்

இ. சுவிட்சர்லாந்து

**ஈ. சிங்கப்பூர் ☑**

✓ விசாகப்பட்டினத்தில் நடந்த சிங்கப்பூர்–இந்திய கடல்சார் இருதரப்புப்பயிற்சியில் (SIMBEX) இந்தியா மற்றும் சிங்கப்பூர் கடற்படைகள் பங்கேற்றன. இந்திய கடற்படையானது SIMBEX–2022இன் 29ஆம் பதிப்பை இரண்டு கட்டங்களாக நடத்துகிறது. விசாகப்பட்டினத்தில் துறைமுகம் சார்ந்த பயிற்சிகளும் வங்காள விரிகுடாவில் கடல்சார் பயிற்சிகளும் நடைபெறும். SIMBEX பயிற்சிகள் கடந்த 1994ஆம் ஆண்டில் தொடங்கின. இந்தப் பயிற்சி தொடக்கத்தில், 'லயன் கிங்' என்று அழைக்கப்பட்டது.

**7. ஜல்ஜீவன் திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் 100% குழாய்வழி குடிநீர் இணைப்புகளை வழங்கிய மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. குஜராத் ☑**

இ. கர்நாடகா

ஈ. மகாராஷ்டிரா

✓ ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் 100% குழாய்வழி குடிநீர் இணைப்புகளை குஜராத் மாநில அரசு வழங்கியுள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டில் பிரதமர் நரேந்திர மோதியால் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், 2024ஆம் ஆண்டுக்குள் ஒவ்வொரு கிராமப்புற வீட்டிற்கும் குழாய்வழி இணைப்புகள்மூலம் ஒவ்வொரு நபருக்கும் 55 லிட்டர் தண்ணீர் கிடைக்க இலக்கு வைத்துள்ளது. ஹரியானா, கோவா, தெலுங்கானா, தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி, டாமன் மற்றும் டையூ, புதுச்சேரி, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் ஏற்கனவே 100% இலக்கை எட்டியுள்ளன.

**8. இந்தியாவில், 'செளர்ய திவாஸ்' கொண்டாடப்படுகிற தேதி எது?**



**அ. அக்டோபர்.27 ☑** ஆ. அக்டோபர்.28

இ. அக்டோபர்.29 ஈ. அக்டோபர்.30

✓ ஜம்மு–காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில், 'சௌர்ய திவாஸ்' அக்டோபர்.27 அன்று கொண்டாடப்படுகிறது. கடந்த 1947ஆம் ஆண்டு புட்காம் வானூர்தி நிலையத்தில் இந்திய இராணுவத்தின் விமானம் தரையிறங்கியதை நினைவுகூரும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது. இந்திய இராணுவமும் அக்.27ஆம் தேதியன்று காலாட்படை நாளைக் கொண்டாடுகிறது. 1947 அக்.27 அன்று, ஜம்மு–காஷ்மீரிலிருந்து பாகிஸ்தானின் படைகளை வெளியேற்றுவதற்காக இந்திய வான்படை புட்காம் விமான நிலையத்தில் வைகது இந்திய இராணுவத்துடன் கைகோர்த்தது.

**9. 'லக்ஷ்மீர் பந்தர் திட்டம்' என்பது கீழ்க்காணும் எந்த மாநில அரசின் முனைவாகும்?**

அ. தமிழ்நாடு

ஆ. ஆந்திர பிரதேசம்

இ. கர்நாடகா

**ஈ. மேற்கு வங்கம் ☑**



✓ மேற்கு வங்க மாநில அரசின், 'லக்ஷ்மீர் பந்தர் திட்டம்', பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுப்பிரிவில் 'ஸ்கோச் விருதைப்' பெற்றுள்ளது. மேற்கு வங்க மாநில அரசானது 25–60 வயதுக்குட்பட்ட குடும்பத்தலைவிக்கு நிதியுதவி வழங்கும் இந்தத் திட்டத்தை 2021 ஆகஸ்டில் தொடங்கியது. இந்தத் திட்டத்தின்கீழ், பொதுப்பிரிவுப் பெண்களுக்கு மாதந்தோறும் ₹500உம், SC மற்றும் ST பிரிவினருக்கு மாதந்தோறும் சுமார் ₹1,000உம் வழங்கப்படுகிறது.


**10. அண்மையில் எந்த நாட்டுடன் இணைந்து 2022 அக்டோபரில், 'புத்தாக்க நாளை' இந்தியா அனுசரித்தது?**

அ. ஆஸ்திரேலியா

**ஆ. ஸ்வீடன் ☑**

இ. சுவிட்சர்லாந்து

ஈ. பிரான்ஸ்



✓ ஒன்பதாம் ஆண்டு இந்தியா–ஸ்வீடன் புத்தாக்க நாளானது வெற்றிகரமாக கொண்டாடப்பட்டது. ஸ்வீடன் மற்றும் இலத்துவியாவிற்கான இந்திய தூதரகம், சுவீடன்–இந்தியா வணிக கவுன்சில் மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியானது, 'இந்தியா ஸ்வீடனின் பசுமை மாற்றத்தை துரிதப்படுத்துதல்' என்ற கருப்பொருளில் நடைபெற்றது. இதில் உலகம் முழுவதிலுமிருந்து 1,000–க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் பங்கேற்றனர். இந்தியா ஸ்வீடன் புத்தாக்க நாள் – 2022 ஆனது இந்தியா அன்லிமிடெட் மூலம் நடத்தப்பட்டது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்திய–அமெரிக்க கூட்டு இராணுவப் பயிற்சியான, "யுத் அப்யாஸ் – 2022" உத்தராகண்டில் தொடங்கவுள்ளது.**

இந்திய–அமெரிக்க 18ஆவது கூட்டு இராணுவப் பயிற்சியான, "யுத் அப்யாஸ் – 2022" உத்தராகண்டில் இம்மாதம் தொடங்கவுள்ளது. சிறந்த நடைமுறைகள், உத்திகள், தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை பரிமாறிக் கொள்ளும் நோக்கத்துடன் இருநாடுகளின் இராணுவங்களுக்கிடையே இத்தகைய பயிற்சி ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது. முந்தைய பயிற்சி 2021 அக்டோபரில் அமெரிக்காவின் அலாஸ்காவில் நடைபெற்றது.

இப்பயிற்சியின்போது, அமைதிக்காப்பு, அமைதியை நிலைநாட்டுதல் ஆகியவை தொடர்பான செயல்பாடுகளும் இடம் பெறும். இந்தக் கூட்டுப்பயிற்சியின்போது மனிதாபிமான உதவி, பேரிடர் நிவாரண நடவடிக்கைகள் ஆகியவற்றிலும் கவனம் செலுத்தப்படும். இயற்கைச்சீற்றத்தின்போது, நிவாரண நடவடிக்கைகளை விரைவாகவும், ஒருங்கிணைந்தும் செயல்படுத்துவதற்கான பயிற்சியை இருநாடுகளும் பெறவுள்ளன.

---

### 2. ஜி20 மாநாடு இன்று தொடக்கம்

பெரும் பொருளாதார மதிப்புகொண்ட நாடுகளை உள்ளடக்கிய ஜி20 கூட்டமைப்பின் மாநாடு இந்தோனேசியாவில் நவ.15 அன்று தொடங்குகிறது.

சர்வதேச அளவில் ஜி20 கூட்டமைப்பு முக்கியப் பங்கு வகித்து வருகிறது. உலகின் சுமார் 85 சதவீத பொருளாதார மதிப்பையும், சுமார் 75% வர்த்தகத்தையும், சுமார் 65 சதவீத மக்கள்தொகையையும் ஜி20 கூட்டமைப்பு நாடுகளே கொண்டுள்ளன. அந்நாடுகள் எடுக்கும் முக்கிய முடிவுகள், சர்வதேச அளவில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தும்.

**உணவு, எரிசக்தி பாதுகாப்பு:** சர்வதேச பொருளாதார விவகாரங்கள் உள்ளிட்டவை குறித்து ஜி20 மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது. முக்கியமாக, சர்வதேச அளவில் உணவுப் பாதுகாப்பையும் எரிசக்தி பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உக்ரைன் மீதான ரஷியாவின் போரால் சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் குறித்தும் இதன்போது விவாதிக்கப்படவுள்ளது.

**ஜி20 தலைமை:** பாலி மாநாடு முடிவடையும்போது, ஜி20 கூட்டமைப்பின் தலைமைப்பொறுப்பை இந்தோனேசிய அதிபர் ஜோகோ விடோடோ இந்தியாவிடம் ஒப்படைக்கவுள்ளார். கூட்டமைப்பின் தலைமைப்பொறுப்பை டிசம்பர் 1–ஆம் தேதியிலிருந்து இந்தியா அதிகாரபூர்வமாக ஏற்கவுள்ளது. அடுத்த ஆண்டு இந்தியாவில் நடைபெறவுள்ள ஜி20 மாநாட்டுக்கு வருகைதருமாறு உறுப்புநாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கவுள்ளேன். 'ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' என்ற கொள்கையின் அடிப்படையில் ஜி20 கூட்டமைப்பை இந்தியா தலைமையேற்று வழிநடத்தும்.

**முக்கிய விவகாரங்கள்:** இந்தியாவின் ஜி20 தலைமைப் பொறுப்பு அடுத்த ஆண்டு நவம்பர் வரை நீடிக்கவுள்ளது. அந்தக் காலகட்டத்தில், பொருளாதாரப் பிரச்னைகள், பருவநிலை மாற்றம், பன்னாட்டு அமைப்புகளில் ஒத்துழைப்பு, சர்வதேச அளவில் பயங்கரவாதச் செயல்கள் அதிகரித்து வருவது, வளர்ந்துவரும் நாடுகள் எதிர்கொள்ளும் கடன் பிரச்னைகள் உள்ளிட்டவற்றுக்குத் தீர்வுகாண இந்தியா முயற்சிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

### 3. சரத் கமலுக்கு தயான் சந்த் கேல் ரத்னா விருது பிரக்ஞானந்தாவுக்கு அர்ஜுனா

நடுவணரசு சார்பில் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதான மேஜர் தயான் சந்த் கேல் ரத்னா விருதுக்கு மூத்த டேபிள் டென்னிஸ் வீரரும் தமிழகத்தைச் சேர்ந்தவருமான சரத் கமல் தேர்வாகி உள்ளார். தமிழக செஸ் வீரர் பிரக்ஞானந்தா உள்பட 25 பேருக்கு அர்ஜுனா விருதுகளும், 4 பேருக்கு துரோணச்சார்யா விருதுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

விளையாட்டில் சிறந்து விளங்கும் வீரர்களைக் கௌரவிக்கும் வகையில் ஆண்டுதோறும் கேல் ரத்னா, அர்ஜுனா, துரோணாச்சார்யா விருதுகள், வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

**துரோணாச்சார்யா விருதுகள்:** ஜீவன் ஜோத் சிங் தேஜா (வில்வித்தை), முகமது அலி (குத்துச்சண்டை), சுமா சித்தார்த் (துப்பாக்கி சுடுதல்), சுஜித் மான் (மல்யுத்தம்).

**வாழ்நாள் சாதனையாளர்:** தினேஷ் ஜவஹர் (கிரிக்கெட்), பிமால் பிரபுல்லா (கால்பந்து), ராஜ் சிங் (மல்யுத்தம்).

**தயான்சந்த் வாழ்நாள் சாதனையாளர் விருது:** அஸ்வினி அக்குன்ஜி (தடகளம்), தரம்வீர் சிங் (ஹாக்கி), சுரேஷ் (கபடி), நிர் பகதூர் குருங் (பாரா தடகளம்).

**மௌலானா அபுல் கலாம் ஆஸாத் விருது:** குருநானக் தேவ் பல்கலைக்கழகம், அமிர்தசரஸ்.

---

### 4. 20–இல் FIFA உலகக்கோப்பை கால்பந்து போட்டி தொடக்கம்

உலகின் மிகப்பெரிய விளையாட்டுத் திருவிழாவான பிஃபா உலகக் கோப்பை போட்டிகள் கத்தாரில் வரும் நவ.20–ஆம் தேதி தொடங்கி டிச.18 வரை கோலாகலமாக நடைபெறவுள்ளது.

தென்னமெரிக்க கண்டத்தில் உள்ள உருகுவேயில் முதல் உலகக்கோப்பை போட்டி 1930–இல் நடத்தப்பட்டது. 13 நாடுகளின் அணிகள் இதில் பங்கேற்றன.

**முதல் சாம்பியன் உருகுவே, நடப்புச் சாம்பியன் பிரான்ஸ்:**

4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் உலகக்கோப்பை கால்பந்து போட்டியின் ஒருபகுதியாக மாண்டெவிடோ நகரில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் 93,000 ரசிகர்கள் முன்னிலையில் ஆர்ஜென்டீனாவை 4–2 என வீழ்த்தி முதல் உலகச்சாம்பியன் ஆனது உருகுவே. 2018–இல் பிரான்ஸ் அணி கோப்பையை வென்றது.

**தகுதிச்சுற்று ஆட்டங்கள்:**

ஆப்பிரிக்கா, ஆசியா, வடக்கு, மத்திய, தென் அமெரிக்கா, கரீபியன், ஓசேனியா, ஐரோப்பா என 6 கண்டங்கள் அளவில் தகுதிச் சுற்று ஆட்டங்கள் நடத்தப்பட்டு, உலகக் கோப்பை போட்டிக்கு முன்பு 2 ஆண்டுகள் வரை தகுதிச் சுற்று நடைபெறும். போட்டியை நடத்தும் நாடு நேரடியாக தகுதி பெற்று விடும். ஆனால் 2006 முதல் நடப்பு சாம்பியன் அணியும் தகுதிச் சுற்றில் பங்கேற்குமாறு விதிகள் திருத்தப்பட்டன.

இத்தாலிய வடிவமைப்பாளர் சில்வியோ கஸனிகா வடிவமைத்த உலகக்கோப்பைதான் தற்போது பயன்பாட்டில் உள்ளது.

**32 அணிகள் பங்கேற்பு:**

8 குரூப்களாக 32 அணிகள் பிரிக்கப்பட்டு தலா 4 அணிகள் இடம் பெற்றுள்ளன.

**எட்டு மைதானங்கள்:**

கத்தாரில் மொத்தம் 8 மைதானங்களில் உலகக்கோப்பை ஆட்டங்கள் நடைபெறுகின்றன.

**முதல் ஆட்டம்:**

நவ.20: கத்தார்–ஈக்குவடார்.

**1. உலக மக்கள்தொகை வாய்ப்புகள் – 2022இன்படி, 2022 நவம்பர் நிலவரப்படி உலக மக்கள்தொகை எவ்வளவு?**



அ. 5 பில்லியன்

**ஆ. 8 பில்லியன் ☑**

இ. 10 பில்லியன்

ஈ. 12 பில்லியன்

✓ "உலக மக்கள்தொகை வாய்ப்புகள் – 2022" அறிக்கையின்படி, 2022 நவம்பர்.15 அன்று உலக மக்கள்தொகை 8 பில்லியனை எட்டும். கடந்த 1950ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன்முறையாக கடந்த 2020இல் உலக மக்கள்தொகை வளர்ச்சி 1 சதவீதத்திற்கும் குறைவாகச் சரிந்துள்ளது என்றும் 2030ஆம் ஆண்டில் 8.5 பில்லியனாகவும், 2050ஆம் ஆண்டில் 9.7 பில்லியனாகவும், 2080ஆம் ஆண்டில் 10.4 பில்லியனாகவும் அது உயரும் என்றும் ஐநா தெரிவித்து உள்ளது. தற்போது 1.412 பில்லியன் மக்கள்தொகைகொண்ட இந்தியா, அடுத்த ஆண்டு 1.426 பில்லியன் மக்கள் தொகையுடன் சீனாவை விஞ்சும்.

**2. 2022 – G20 உச்சிமாநாட்டில் ஜஸ்ட் எனர்ஜி டிரான்சிஷன் பார்ட்னர்ஷிப்பில் கையெழுத்திட்ட நாடு எது?**




அ. இந்தியா

**ஆ. இந்தோனேசியா ☑**

இ. சீனா

ஈ. ஜப்பான்

✓ பாலியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் G-20 உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக சர்வதேச கடன் வழங்குநர்கள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த நாடுகளுடன் இந்தோனேசியா ஜஸ்ட் எனர்ஜி டிரான்சிஷன் பார்ட்னர்ஷிப்பில் கையெழுத்திட்டது. $20 பில்லியன் டாலர்கள் மதிப்பிலான இந்த ஒப்பந்தம், இந்தோனேசியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டை அதிகரிக்கவும், நிலக்கரியைச் சார்ந்திருப்பதைக் குறைக்கவும் நிதியுதவி அளிக்கும்.

**3. 'குளோபல் ஷீல்ட்' என்ற காப்பீட்டு முனைவை அறிவித்துள்ள உலகளாவிய கூட்டமைப்பு எது?**




**அ. G-7 மற்றும் V20 ☑**


ஆ. WEF

இ. UNEP

ஈ. G-20 மற்றும் V20

✓ எகிப்தில் நடந்த COP27 காலநிலை உச்சிமாநாட்டில் G7 மற்றும் 58 காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய நாடுகளின் V20 குழுவால், 'குளோபல் ஷீல்ட்' என்ற காப்பீட்டு முனைவு அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டது. கால நிலை பேரழிவுகள் ஏற்பட்டால் குறைந்த வருமானம் மற்றும் பாதிக்கப்படக்கூடிய நாடுகளுக்கு உதவ ஜெர்மனி $172 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்கும். கனடா, அயர்லாந்து மற்றும் டென்மார்க்போன்ற நாடுகள் இதுவரை மேலும் €40 மில்லியன் யூரோக்களை இம்முனைவுக்கு அளிப்பதாக உறுதியளித்துள்ளன. அமெரிக்க அதிபரும் இந்த முனைவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்தார்.

**4. காலநிலை மாற்ற செயல்திறன் குறியீட்டின்படி, காலநிலை தணிப்பில் முன்னணியில் உள்ள நாடு எது?**



அ. நார்வே

ஆ. ஜெர்மனி

**இ. டென்மார்க் ☑**

ஈ. ஆஸ்திரேலியா

✓ காலநிலை மாற்ற செயல்திறன் குறியீட்டின்படி, காலநிலை தணிப்பில் தற்போதைய முன்னணியில் டென்மார்க் தொடர்ந்து உள்ளது. 'உயர்ந்த' தேசிய மற்றும் 'மிகவுயர்ந்த' மதிப்பிடப்பட்ட சர்வதேச காலநிலைக் கொள்கையைக் கொண்ட ஒரே நாடு டென்மார்க் ஆகும். டென்மார்க் நான்காவது இடத்தையும் ஸ்வீடன் அதனைத் தொடர்ந்த இடத்தையும் பெற்றுள்ளது. எந்த நாடும் முதல் 3 இடங்களைப் பெறவில்லை. இந்தியா எட்டாவது இடத்தில் உள்ளது.

### 5. 'பிரஸ்தான்' என்ற கட்டமைக்கப்பட்ட பயிற்சியை நடத்துகிற இந்திய ஆயுதப்படை எது?



அ. இந்திய இராணுவம்

**ஆ. இந்திய கடற்படை ☑**

இ. இந்திய வான்படை

ஈ. இந்திய கடலோர காவல்படை

✓ எண்ணெய் & இயற்கை எரிவாயு கழகத்தின் (ONGC) தளத்தில் மும்பைக்கு அப்பாலுள்ள கடல்சார் சொத்துக்களைப் பாதுகாப்பதில் நிறுவன செயல்திறனை மதிப்பிடுவதற்காக இந்திய கடற்படை, 'பிரஸ்தான்' என்ற கட்டமைக்கப்பட்ட பயிற்சியை நடத்தியது. 'பிரஸ்தான்' பயிற்சியானது ஆண்டுக்கு இரண்டு முறை மேற்கு கடற்படை தலைமையின் கீழ் நடைபெறுகிறது. இந்தியாவின் கடற்கரையோரங்களில் உள்ள எண்ணெய் உற்பத்தி தளங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு முதன்மையாக இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### 6. இந்தியா–மொசாம்பிக்–தான்சானியா முத்தரப்பு பயிற்சியின் முதலாம் பதிப்பை நடத்தும் நாடு எது?



அ. இந்தியா

ஆ. மொசாம்பிக்

**இ. தான்சானியா ☑**

ஈ. மாலத்தீவுகள்

✓ இந்தியா–மொசாம்பிக்–தான்சானியா முத்தரப்பு பயிற்சியின் முதலாம் பதிப்பு சமீபத்தில் தான்சானியாவின் டார் எஸ் சலாமில் தொடங்கியது. இந்திய கடற்படையை வழிகாட்டப்பட்ட ஏவுகணை போர்க்கப்பல், INS தர்காஷ், ஒரு சேதக் உலங்கு வானூர்தி மற்றும் மார்கோஸ் (சிறப்புப்படைகள்) ஆகியவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இப்பயிற்சி மூன்று நோக்கங்களைக் கொண்டுள்ளது: பயிற்சி மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்வதன்மூலம் பொதுவான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் திறன் மேம்பாடு; இயங்குதன்மையை மேம்படுத்துதல் மற்றும் கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்துதல்.

### 7. 'சரஸ் உணவுத்திருவிழா'வை நடத்துகிற நடுவண் அமைச்சகம் எது?

**அ. ஊரக வளர்ச்சி அமைச்சகம் ☑**

ஆ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

இ. கலாச்சார அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

ग्रामीण विकास मंत्रालय
भारत सरकार
MINISTRY OF RURAL DEVELOPMENT
GOVERNMENT OF INDIA

✓ நடுவண் ஊரக வளர்ச்சி அமைச்சகமானது 'சரஸ் உணவுத்திருவிழா'வை நடத்துகிறது. சமீபத்தில், ஊரக வளர்ச்சி அமைச்சர் புது தில்லியில், 'சரஸ் உணவுத்திருவிழா – 2022'ஐத் தொடங்கிவைத்தார். சுயஉதவி குழுக்கள் சார்ந்த பெண்களால் தயாரிக்கப்பட்ட சரஸ் தயாரிப்புகளை சிறந்த முறையில் சந்தைப்படுத்துவதற்காக www.esaras.in என்ற இணையதளத்தையும் அமைச்சர் தொடங்கிவைத்தார். நடுவண் ஊரக வளர்ச்சி அமைச்சகம் அனைத்து மாநில தலைநகரங்கள், முக்கிய நகரங்கள் மற்றும் பெருநகரங்கள், விமான நிலையங்கள் மற்றும் இரயில் நிலையங்களில் பெண்கள் சுய உதவிக்குழுக்களால் சரஸ் அரங்குகளை நிறுவவுள்ளது.

**8. கீழ்க்காணும் எந்த மாநிலத்தில், 'புதிர்வழித் தோட்டம் மற்றும் மியாவாக்கி வனத்தை' பிரதமர் திறந்து வைத்தார்?**



**அ. குஜராத் ☑**

ஆ. மகாராஷ்டிரா

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. கர்நாடகா

✓ இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி அண்மையில் குஜராத் மாநிலத்தின் ஏக்தா நகரத்தில் புதிர்வழித்தோட்டம் மற்றும் மியாவாக்கி வனத்தை நாட்டுக்கு அர்ப்பணித்தார். ஜப்பான் நாட்டின் தாவரவிய வல்லுநரும், சுற்றுச்சூழல் நிபுணருமான டாக்டர் அகிரா மியாவாக்கி உருவாக்கிய நுட்பத்தின் பெயரால் இந்தக் காடு அழைக்கப்படுகிறது. இந்தப் புதிய நுட்பத்தின்படி, பல்வேறு இனங்களின் மரக்கன்றுகள் ஒன்றோடு ஒன்று நெருக்கமாக நடப்பட்டு, அதன் மூலம் அடர்ந்த நகர்ப்புற காடு உருவாக்கப்படுகிறது.

**9. ரேட்டில் நீர் மின்னுற்பத்தித் திட்டம் கட்டப்படவுள்ள மாநிலம்/ யூனியன் பிரதேசம் எது?**



அ. தமிழ்நாடு

ஆ. ஆந்திர பிரதேசம்

இ. கர்நாடகா

**ஈ. ஜம்மு–காஷ்மீர் ☑**

✓ ஜம்மு–காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் உள்ள கிஸ்த்வார் மாவட்டத்தில் செனாப் ஆற்றின்மீது கட்டப்பட்டு வரும் திட்டமே ரேட்டில் நீர் மின்னுற்பத்தித் திட்டம் ஆகும். அந்த நீர் மின்னுற்பத்தி நிலையத்தில் நிலச்சரிவு ஏற்பட்டதில், 4 பேர் மரணித்தனர் மற்றும் 15 பேர் காயமடைந்தனர். கடந்த 2021ஆம் ஆண்டில், 850 MW மின்னுற்பத்தித்திறன் கொண்ட ரேட்டில் நீர் மின்னுற்பத்தித் திட்டத்திற்கு ₹5281.94 கோடி முதலீடு ஒதுக்கி நடுவணமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

**10. 2022இல், 'நான்காவது வங்காளதேச திரைப்பட விழாவை' நடத்தும் இந்திய நகரம் எது?**




அ. கௌகாத்தி

**ஆ. கொல்கத்தா ☑**

இ. கோகிமா

ஈ. இம்பால்

✓ வங்காளதேச திரைப்பட விழாவின் நான்காம் பதிப்பு கொல்கத்தாவில் நடைபெற்று வருகிறது. 5 நாட்கள் நடைபெறும் இவ்விழாவில் வங்காளதேசத்தைச் சேர்ந்த 37 திரைப்படங்கள் மற்றும் ஆவணப்படங்கள் திரையிடப்படும். நான்காம் ஆண்டாக கொல்கத்தாவில் வங்காளதேச திரைப்பட விழா நடத்தப்படுகிறது. புத்தகக் கண்காட்சிகள் மற்றும் திரைப் பட விழாக்கள் போன்ற கலாச்சார நிகழ்வுகள் இந்தியா மற்றும் வங்காளதேசம் மற்றும் மேற்கு வங்காளம் மற்றும் வங்காளதேசம் இடையேயான பிணைப்பை மிகுந்து வலுப்படுத்துகின்றன.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. உலக மக்கள்தொகை 800 கோடியை எட்டியது!**

உலக மக்கள்தொகை எட்டு பில்லியனை (800 கோடி) இன்று எட்டியதாக ஐக்கிய நாடுகள் சபையின் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 ஆண்டுகளில் உலக மக்கள்தொகை 200 கோடியாக அதிகரித்துள்ளது. 1998இல் 600 கோடியாக இருந்த உலக மக்கள்தொகை கடந்த 2010இல் 700 கோடியாக அதிகரித்தது. அடுத்த 12 ஆண்டுகளில் அதாவது 2022இல் மக்கள்தொகை 100 கோடியாக அதிகரித்து, நவ.15, 2022இல் உலக மக்கள்தொகை 800 கோடியை எட்டியுள்ளது.

ஐநா சபையின் கூற்றுப்படி, 2030ஆம் ஆண்டில், உலக மக்கள்தொகை 850 கோடியை எட்டும். எனினும், 1950ஆம் ஆண்டிற்குப் பிறகு முதன்முறையாக 2020ஆம் ஆண்டில் மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் 1% குறைந்துள்ளது என்று ஐநா தெரிவித்துள்ளது. ஐநாஇன் மக்கள்தொகை அறிக்கையில், 2050இல் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், எகிப்து, காங்கோ, நைஜீரியா, தான்சானியா மற்றும் எத்தியோப்பியா இந்த 8 நாடுகளில் இருப்பார்கள் என்று தெரிவித்துள்ளது.

2022 மற்றும் 2050ஆம் ஆண்டுக்கு இடையில் மக்கள்தொகை குறையும் 61 நாடுகளை ஐநா கணித்துள்ளது. இந்த நாடுகளில் பெரும்பாலானவை ஐரோப்பாவைச்சேர்ந்தவையாக இருக்கும். தற்போது, 46 நாடுகளின் மக்கள்தொகை வேகமாக அதிகரித்து வருவதாக ஐநா கணித்துள்ளது.

ஜூலை.11, 2022 அன்று, உலக மக்கள்தொகை நாளன்று ஐநா வெளியிட்ட அறிக்கையில், 2023ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டில், இந்தியாவின் மக்கள்தொகை சீனாவின் மக்கள்தொகையைவிட அதிகமாக இருக்கும் என்று கூறியது. இதன்மூலம் உலகிலேயே அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக இந்தியா மாறும் என்றும் தெரிவித்தது.

தற்போது சீனாவின் மக்கள் தொகை 1.426 பில்லியனாகவும், இந்தியாவின் மக்கள்தொகை 1.412 பில்லியனாகவும் உள்ளது. 2023இல் இந்தியாவின் மக்கள்தொகை 1.429 பில்லியனாக உயரும் என நம்பப்படுகிறது. மேலும் 2050இல் இந்த எண்ணிக்கை 1.668 பில்லியனை எட்டும். இந்த நூற்றாண்டின் நடுவில் சீனாவின் மக்கள் தொகை 1.317 பில்லியனாக குறையும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

**1. COP27இன் ஒருபகுதியாக எந்த நாட்டுடன் இணைந்து, 'LeadIT உச்சிமாநாட்டை' இந்தியா நடத்தியது?**

**அ. சுவீடன் ☑**

ஆ. ஜப்பான்

இ. ஆஸ்திரேலியா

ஈ. டென்மார்க்

✓ இந்தியாவும் சுவீடனும் இணைந்து COP27இன் ஒருபகுதியாக, 'LeadIT உச்சிமாநாட்டை' நடத்தின. LeadIT (தொழிற்துறை மாற்றத்திற்கான தலைமை) முனைவு சுவீடன் மற்றும் இந்திய அரசாங்கங்களால் 2019 செப்டம்பரில் ஐநா காலநிலை நடவடிக்கை உச்சிமாநாட்டில் தொடங்கப்பட்டது. மேலும் இதன் உலகப் பொருளாதார மன்றம் (WEF) ஆதரிக்கிறது. இது தொழிற்துறையின் குறைந்த கரியமில வாயு உமிழ்வுக்கான மாற்றத்தில் கவனம் செலுத்துகிறது. இந்த உச்சிமாநாட்டைத் தொடர்ந்து COP27இல் இந்திய அரங்கில் 'LeadIT உச்சிமாநாட்டு அறிக்கை – 2022' வெளியீட்டு விழா நடைபெற்றது.

**2. 'ஆர்டெமிஸ்' என்பது எந்த நாட்டின் திட்டமாகும்?**

அ. இஸ்ரேல்

ஆ. ஐக்கிய அரபு அமீரகம்

**இ. அமெரிக்கா ☑**

ஈ. சீனா



✓ அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான NASA, பூமியின் துணைக்கோளான நிலவுக்கு, 'ஆர்டெமிஸ்' என்ற மிகவும் ஆற்றல்வாய்ந்த ஏவுகலத்தை அனுப்பியுள்ளது. 100 மீட்டர் உயரமுள்ள 'ஆர்ட்டெமிஸ்' ஏவுகலம், நிலவின் திசையில் விண்கலத்தை அனுப்பும் நோக்கத்தைக் கொண்டுள்ளது. அவ்விண்கலம், விண்வெளி ஏவுதல் அமைப்பு ஏவுகலம் மற்றும் ஓரியன் விண்கலம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

**3. 2022இல் எந்தக் கருப்பொருளின் கீழ் இந்தியாவின் தலைமையில் G20 இருக்கவுள்ளது?**

**அ. ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம் ☑**

ஆ. தரவு தனியுரிமை

இ. ஆத்மநிர்பார் G20

ஈ. சர்வதேச வர்த்தகம்

✓ 2022 டிசம்பர்.1 முதல் இந்தோனேஷியாவிடமிருந்து பொறுப்பை பெற்றுக்கொண்டு ஓராண்டு காலத்திற்கு G20இன் தலைமைப் பொறுப்பை இந்தியா வகிக்கும். "ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்" என்பது இந்தியாவின் தலைமையின் கீழ் இருக்கப்போகும் G20 அமைப்பின் கருப்பொருளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. "வளர்ச்சிக்கான தரவு" என்ற கொள்கை நமது ஒட்டுமொத்த கருப்பொருளின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கும் என்று இந்தியப் பிரதமர் அறிவித்துள்ளார்.

**4. CITES உறுப்புநாடுகளின் 19ஆவது மாநாட்டை நடத்தும் நாடு எது?**

அ. நார்வே

ஆ. ஜெர்மனி

**இ. பனாமா ☑**

ஈ. ஆஸ்திரேலியா

✓ CITES உறுப்பு நாடுகளின் 19ஆவது மாநாடு மத்திய அமெரிக்க நாடான பனாமாவில் நடைபெற்று வருகிறது. CITES என்பது சில வனவிலங்குகள் மற்றும் தாவர இனங்களின் நாடு கடந்த இயக்கத்தை ஒழுங்குபடுத்தும் ஒப்பந்தமாகும். அழிந்துவரும் உயிரினங்களில் சர்வதேச வர்த்தகம் தொடர்பான தீர்மானத்தின் (CITES) கீழ் நன்னீர் ஊர்வனமான ஆமையைப் (red–crowned roofed turtle) பாதுகாக்க இந்தியா முன்மொழிந்துள்ளது. இந்தியா மற்றும் வங்கதேசத்தை பூர்வீகமாகக் கொண்ட இந்த ஆமை இனம், அழிந்துவரும் அபாயத்தில் உள்ளது.

**5. இந்தியாவில், 'உலக சிறுசேமிப்பு நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**



**அ. அக்டோபர்.30 ☑**

ஆ. நவம்பர்.01

இ. நவம்பர்.10

ஈ. நவம்பர்.15

✓ உலக சிறுசேமிப்பு நாளின் 98ஆவது ஆண்டு கொண்டாட்டம் இந்தியாவில் அக்.30 அன்று கடைப்பிடிக்கப்பட்டது. 1924ஆம் ஆண்டு இத்தாலியின் மிலன் நகரில் நடைபெற்ற முதல் சர்வதேச சிக்கன மாநாட்டில் அக்.31ஆம் தேதியை உலக சிறுசேமிப்பு நாளாக அறிவித்தது. இந்த நாளைக் கொண்டாடுவதன் நோக்கம், சேமிப்பை நோக்கிய நமது பழக்கத்தை மாற்றுவதும், செல்வத்தின் முக்கியத்துவத்தை தொடர்ந்து நமக்கு நினைவூட்டுவதும் ஆகும். இந்த ஆண்டு கருப்பொருள், "Saving prepares you for the future" என்பதாகும்.

**6. லூலா டா சில்வா என்பார் கீழ்க்காணும் எந்த நாட்டின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார்?**



அ. ஆஸ்திரேலியா

**ஆ. பிரேசில் ☑**

இ. ஐக்கிய இராச்சியம்

ஈ. நியூசிலாந்து

✓ பிரேசிலுக்கான அதிபர் தேர்தலில், லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா 2 மில்லியன் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றதன்மூலம் தற்போதைய பிரேசில் அதிபர் ஜெய்ர் போல்சனாரோவை வீழ்த்தினார். இடதுசாரி முன்னாள் தலைவரான லூலா அதிபராக வெற்றிபெற்ற போதிலும், தற்போதைய தீவிர வலதுசாரி போட்டியாளரான ஜெய்ர் போல்சனாரோ தனது தோல்வியை ஒப்புக்கொள்ளாமல் உள்ளார். பதவியில் இருக்கும் அதிபர் ஒருவர் மீண்டும் தேர்தலில் வெற்றிபெறத்தவறிய முதல் பிரேசில் அதிபர் தேர்தலாக இது அமைந்தது.

**7. இந்தியாவில், 'Football4Schools' முனைவைச் செயல்படுத்த FIFA மற்றும் AIFF உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நடுவண் அமைச்சகம் எது?**

**அ. கல்வி அமைச்சகம் ☑**

ஆ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

இ. கலாச்சார அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

शिक्षा मंत्रालय
MINISTRY OF
EDUCATION
सत्यमेव जयते

✓ இந்தியாவில், 'Football4Schools' என்ற திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக நடுவண் கல்வி அமைச்சகம் சமீபத்தில் FIFA மற்றும் AIFF உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. 'Football4Schools' திட்டம், படிப்புடன் முதன்மை விளையாட்டுக்கள்மூலம் குழந்தைகளை ஊக்குவிக்கும் மற்றும் அவர்களின் முழுமையான வளர்ச்சியை உறுதிசெய்யும் ஒரு நேர்மறையான கருவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**8. உலகளாவிய காசநோய் அறிக்கை-2022இன்படி, 2021ஆம் ஆண்டுக்கான இந்தியாவின் காசநோய் (1 இலட்சம் மக்கள்தொகைக்கு) பாதிப்பு எண்ணிக்கை எவ்வளவு?**

அ. 101

**ஆ. 210 ☑**

இ. 510

ஈ. 2100

210

✓ உலக நலவாழ்வு அமைப்பு (WHO) உலகளாவிய காசநோய் அறிக்கை-2022ஐ வெளியிட்டது. இது காசநோய்க்கான நோயைக்கண்டறிதல், சிகிச்சை & பாதிப்பு ஆகியவற்றில் COVID-19 தொற்றுநோயின் தாக்கத்தைக் குறிப்பிடுகிறது. 2021ஆம் ஆண்டுக்கான இந்தியாவின் காசநோய் பாதிப்பு 100,000 மக்கள்தொகைக்கு 210 ஆகும்; இது 2015இன் அடிப்படை ஆண்டோடு ஒப்பிடும்போது 18% சரிவாகும். இது உலக சராசரியான 11%ஐவிட 7 சதவீத புள்ளிகள் அதிகம். காசநோய் பாதிப்பு விகித அடிப்படையில் இந்தியா 36ஆவது இடத்தில் உள்ளது.

**9. அண்மையில் பரிசோதனை செய்யப்பட்ட, 'பூசா நரேந்திர கலாநாமக்' என்பது எந்தப்பயிரினமாகும்?**

அ. கோதுமை

**ஆ. அரிசி ☑**

இ. மாங்கனி

ஈ. பருத்தி



✓ இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனமானது இரண்டு புதிய குறுவைகளை உத்தர பிரதேச மாநிலத்தில் வைத்து வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது. அவை 'பூசா நரேந்திர கலாநாமக் 1638' மற்றும் 'பூசா நரேந்திர கலாநாமக் 1652' ஆகும். 'கலாநாமக்' என்பது கருப்பு உமியுடனும் மிகுந்த வாசனையுடனும் கூடிய ஒரு பாரம்பரிய நெல் வகை ஆகும். இது ஸ்ரவஸ்தி மக்களுக்கு புத்தரளித்த பரிசாகக் கருதப்படுகிறது. இது உத்தரபிரதேசத்தின் தெராய் பகுதியின் 11 மாவட்டங்களிலும் நேபாளத்திலும் விளைகிறது. 'கதிர் சாய்தலால்' பாதிப்புக்குள்ளாகும் இந்த நெல் வகையில் புதிய குள்ள இரகம் இரட்டிப்பு மகசூலைத் தரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

**10. இராணிப்பூர் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இந்திய மாநிலம் எது?**

**அ. உத்தர பிரதேசம் ☑**

ஆ. அஸ்ஸாம்

இ. பீகார்

ஈ. குஜராத்



✓ உத்தர பிரதேச மாநிலத்தின் இராணிப்பூர் புலிகள் காப்பகம் இந்தியாவின் 53ஆம் புலிகள் காப்பகமாக மாறியுள்ளது. இப்புலிகள் காப்பகம் 529.36 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது. இது துத்வா, பிலிபித் மற்றும் அமங்கர் ஆகிய மூன்று புலிகள் காப்பகங்களைத் தொடர்ந்து உத்தர பிரதேச மாநிலத்தின் நான்காவது புலிகள் காப்பகமாக உள்ளது. இராணிப்பூர் புலிகள் காப்பகம் வட வெப்பமண்டல உலர் இலையுதிர் காடுகளால் சூழப்பட்டுள்ளது மற்றும் புலி, சிறுத்தை, கரடி, புள்ளிமான், சாம்பார், சிங்காரமான் போன்ற பாலூட்டிகளின் தாயகமாக இது உள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கடலோர பாதுகாப்பு ஒத்திகை பயிற்சி சீ விஜில்–22 நிறைவு**

கடலோர பாதுகாப்பு ஒத்திகை பயிற்சியான சீ விஜில்–22 நவ.15, 16 ஆகிய இரண்டு தேதிகளில் நாட்டின் கடலோரப் பகுதியில் நடத்தப்பட்டது. அமைதிக்காலம் முதல் போர்க்காலம் வரை கடலோரப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய கண்காணிப்பு நடவடிக்கைகளை மையமாக கொண்டு இந்த ஒத்திகை மேற்கொள்ளப்பட்டது.

கரையோரப் பகுதிகளின் பாதுகாப்பு நெறிமுறைகளில் கவனத்துடன் செயல்படுதல், விதிமீறல் நடவடிக்கைகளை கண்காணித்து தடுத்தல் போன்றவை குறித்தும் இந்த ஒத்திகையில் பயிற்சி தரப்பட்டது. 9 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 17 அரசு அமைப்புகள் இந்த கடலோர பாதுகாப்பு நடவடிக்கையில் பங்கேற்றன. தீவிரவாத தடுப்பு தொடர்பாகவும், அவசரகால சூழலில் துறைமுக மேலாண்மை குறித்தும் பயிற்சிகள் மேற்கொள்ளப்ப–ட்டன. பல்வேறு மாநிலங்களின் தேசிய மாணவர் படையை சேர்ந்த 800க்கும் மேற்பட்டோர் இந்தப் பாதுகாப்பு ஒத்திகையில் ஈடுபட்டனர்.

---

**2. பூக்கடை காவல் நிலையத்துக்கு ஐஎஸ்ஓ தரச்சான்று**

சென்னை பூக்கடை காவல் நிலையத்துக்கு 'ஐஎஸ்ஓ' தரச்சான்றிதழ் வழங்கப்பட்டது. சென்னை பூக்கடை காவல் நிலையம் 1876ஆம் ஆண்டு மதராஸ் பட்டணமாக இருந்தபோதே தொடங்கப்பட்ட மிகப்பழைமைவாய்ந்த காவல் நிலையம். பல்வேறு சிறப்பம்சங்கள் கொண்ட பூக்கடை காவல் நிலையத்துக்கு இந்திய தர கவுன்சில் – இந்திய அரசாங்கத்தால் பாதுகாப்பு மற்றும் சுகாதார சான்றிதழுக்கான பணியிட மதிப்பீட்டுக்காக சர்வதேச தர கட்டுப்பாட்டுச் சான்றிதழான ஐஎஸ்ஓ 9001: 2015 வழங்கி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

---

**3. நிலவுக்கு ஆய்வுக் கலம்: விண்ணில் செலுத்தியது NASA**

நிலவுக்கு மீண்டும் மனிதர்களை அனுப்புவதற்கு முன்னோடியாக ஒரு விண்வெளிக்கலத்தை அமெரிக்க விண்வெளி ஆய்வுநிறுவனமான NASA வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. 'ஆர்டமிஸ்–1' என்ற இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்காக கடந்த ஆகஸ்டில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி இருமுறை ஒத்திவைக்கப்பட்டது. அப்பல்லோ விண்கலத் திட்டங்கள் நிறுத்தப்பட்ட ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு, முதன்முறையாக நிலவுக்கு மனிதர்களை அனுப்புவதற்கான இந்த ஆய்வு திட்டத்தை NASA உருவாக்கியுள்ளது. அதற்கு முன்னோட்டமாக, சோதனை முறையில் மூன்று மனித மாதிரிகளுடன் அந்த ஆய்வுக்கலத்தை ஏவ திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், ஏவுகல எரிபொருள் கசிவு மற்றும் எஞ்சின் கோளாறு காரணமாக அந்தத் திட்டம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

---

**1. 'டிஜிட்டல் சக்தி பிரச்சாரம் 4.0' என்ற பிரச்சாரத்தைத் தொடங்கிய நிறுவனம் எது?**

அ. NITI ஆயோக்

**ஆ. பெண்களுக்கான தேசிய ஆணையம் ☑**

இ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

ஈ. உலக பொருளாதார மன்றம்

✓ பெண்களுக்கான தேசிய ஆணையமானது நான்காம் கட்ட டிஜிட்டல் சக்தி பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது. இது எந்தவொரு சட்டத்துக்குப்புறம்பான (அ) பொருத்தமற்ற இணையவழி நடவடிக்கைகளுக்கும் எதிராக பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. இது இணையவெளியில் பெண்களை எண்ம முறையில் மேம்படுத்துதல் மற்றும் திறமையாக்குதல் ஆகியவற்றுக்கான ஓர் இந்தியத் திட்டமாகும். சைபர்பீஸ் அறக்கட்டளை மற்றும் மெட்டாவுடன் இணைந்து டிஜிட்டல் சக்தி பிரச்சாரம் கடந்த 2018ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூன்றாம் கட்டம் 2021 மார்ச்சில் தொடங்கியது.

**2. தேசிய ஓய்வூதிய அமைப்பு அறக்கட்டளையின் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?**

**அ. சூரஜ் பான் ☑**

ஆ. சுபாஷ் சந்திர கார்க்

இ. உர்ஜித் படேல்

ஈ. அரவிந்த் சுப்ரமணியன்

✓ ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது தேசிய ஓய்வூதிய அமைப்பு அறக்கட்டளையின் (NPS அறக்கட்டளை) தலைவராக சூரஜ் பானை நியமித்துள்ளது. தேசிய ஓய்வூதிய அமைப்பின் (NPS) கீழ் நிதிகளை நிர்வகிப்பதற்கு இவ்வறக்கட்டளை பொறுப்பாகும். கடந்த 1983இல் இந்தியப் பொருளாதாரச் சேவையில் சேர்ந்த சூரஜ் பான் சண்டிகரில் உள்ள தொழிலாளர் பணியகத்தின் தலைமை இயக்குநராகப் பணியாற்றி ஓய்வுபெற்றார்.

**3. அதன் தொழில்நுட்ப உச்சிமாநாட்டின் வெள்ளி விழா பதிப்பை ஏற்பாடு செய்த மாநிலம் எது?**

அ. ஒடிசா

**ஆ. கர்நாடகா ☑**

இ. மகாராஷ்டிரா

ஈ. குஜராத்



✓ பெங்களூரு தொழில்நுட்ப உச்சிமாநாட்டின் (BTS–22) வெள்ளிவிழா பதிப்பை பிரதமர் நரேந்திர மோதி தொடங்கி வைத்தார். வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு கர்நாடக மாநில முதலமைச்சர் பசவராஜ பொம்மை நினைவு வில்லை ஒன்றை வெளியிட்டார். இதன் தொடக்க விழாவில் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம், ஆஸ்திரேலியா மற்றும் பின்லாந்து அமைச்சர்கள் கலந்துகொண்டனர். மாநில தகவல் தொழில்நுட்பத் துறையும், உயிரித்தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையும் இந்தியாவின் மென்பொருள் தொழில்நுட்ப பூங்காக்களுடன் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

**4. NITI ஆயோக்கின் நான்காவது முழுநேர உறுப்பினராக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. இரகுராம் இராஜன்

ஆ. உர்ஜித் படேல்

**இ. அரவிந்த் விர்மானி ☑**

ஈ. அருந்ததி பட்டாச்சார்யா



✓ NITI ஆயோக்கின் முழுநேர உறுப்பினராக மூத்த பொருளாதார நிபுணர் டாக்டர் அரவிந்த் விர்மானியை அரசாங்கம் நியமித்துள்ளது. "பொருளாதார வளர்ச்சி மற்றும் நலனுக்கான அறக்கட்டளை" என்ற இலாப நோக்கற்ற பொதுக் கொள்கை அமைப்பின் நிறுவனர்–தலைவராக அவர் உள்ளார். 2007–09 வரை நிதி அமைச்சகத்தில் தலைமைப் பொருளாதார ஆலோசகராகவும் அவர் பணியாற்றியுள்ளார். தற்போது, NITI ஆயோக்கில் மூன்று உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள்: டாக்டர் V K சரஸ்வத், பேராசிரியர் இரமேஷ் சந்த் மற்றும் டாக்டர் V K பால்.

**5. COVID கட்டுப்பாடுகள் நீட்டிக்கப்பட்ட காலத்தில், இந்தியாவுக்கு வந்த அதிகபட்ச வெளிநாட்டினர் கீழ்க்காணும் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்?**

அ. ஐக்கிய இராச்சியம்

**ஆ. அமெரிக்கா ☑**

இ. கனடா

ஈ. ஆஸ்திரேலியா



✓ உள்துறை அமைச்சகத்தின் அண்மைய தரவுகளின்படி, கடந்த ஆண்டு (2021) COVID கட்டுப்பாடுகள் மற்றும் விசா விதிமுறைகளின் நீட்டிக்கப்பட்ட காலத்தில் 15 இலட்சத்திற்கும் அதிகமான வெளிநாட்டினர் இந்தியாவிற்கு வருகை தந்துள்ளனர். இந்தக் காலகட்டத்தில் அதிகபட்சமாக இந்தியாவுக்கு வருகைதந்த வெளிநாட்டவர்கள் அமெரிக்கர்கள் (4.29 இலட்சம்) ஆவர. அதைத் தொடர்ந்து வங்கதேசத்தினர் (2.4 இலட்சம்) உள்ளனர். 2021ஆம் ஆண்டில் மொத்தம் பத்து நாடுகளைச் சார்ந்த வெளிநாட்டினர் இந்தியாவிற்கு வருகை புரிந்தனர். அது மொத்தம் 74.39 சதவீதம் ஆகும்.

**6. வட இந்தியாவின் முதல் மிகையளவு தரவு மையமான, 'Yotta D1' திறக்கப்பட்டுள்ள மாநிலம் எது?**

அ. குஜராத்

ஆ. பஞ்சாப்

**இ. உத்தர பிரதேசம் ☑**

ஈ. மத்திய பிரதேசம்



✓ உத்தர பிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் வட இந்தியாவின் முதல் மிகையளவு தரவு மையமான 'யோட்டா டி1'ஐ திறந்து வைத்தார். ₹5,000 கோடி செலவில் 3,00,000 சதுர அடி பரப்பளவில் இந்தத் தரவு மையம் கட்டப்பட்டுள்ளது. ₹39,000 கோடி மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் உபி மாநில அரசுக்கும் ஹிரானந்தானி குழுமத்துக்கும் இடையே திட்டங்களுக்குச் செலவிடும் நோக்கில் போடப்பட்டுள்ளன. இந்தத் தரவு மையப் பூங்காவில் மொத்தம் ஆறு தரவு மையங்கள் அமைந்திருக்கும்.

**7. பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் நபர்களுக்கு, 'இராஜ்யோத்சவ விருது' வழங்கும் இந்திய மாநிலம் எது?**

அ. கேரளா

**ஆ. கர்நாடகா ☑**

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. தெலுங்கானா



✓ கர்நாடக மாநிலம் இவ்வாண்டு 67ஆம் கன்னட இராஜ்யோத்சவாவை கொண்டாடும் நிலையில், 'இராஜ்யோத்சவ விருது' பெறுபவர்களின் பெயர்களை கர்நாடக மாநில அரசு அறிவித்துள்ளது. இவ்விருது பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க சேவையாற்றிய சிறந்த நபர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. ISROஇன் முன்னாள் தலைவர் K சிவன், கூட்டுறவுச் சங்கங்களை பிரபலப்படுத்திய சோலிகர மடம்மா, யக்ஷகானா கலைஞர் டாக்டர் M பிரபாகர் ஜோஷி உள்ளிட்ட 67 பேர் விருது இவ்வாண்டில் இவ்விருதுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.


**8. 2022 – உலக நகரங்கள் நாளுக்கானக் கொண்டாட்டங்களை நடத்தும் நகரம் எது?**

அ. டோக்கியோ

**ஆ. ஷாங்காய் ☑**

இ. புது தில்லி

ஈ. மாஸ்கோ




✓ உலகளாவிய நகரமயமாக்கலை ஊக்குவிப்பதற்கு சர்வதேச ஒத்துழைப்பின் அவசியத்தை எடுத்துக்காட்டுவதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.31 அன்று உலக நகரங்கள் நாள் கொண்டாடப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் வெவ்வேறு நகரம் இந்நாளின் நிகழ்வை நடத்துகிறது. சீனாவின் ஷாங்காய் இவ்வாண்டுக்கான (2022) நிகழ்வை நடத்துகிறது. "சிறந்த நகரம், சிறந்த வாழ்வு" என்பது உலக நகரங்கள் நாளுக்கான பொதுமையான கருப்பொருளாக அந்த நாள் உருவாக்கப்பட்ட நாளிலிருந்தே உள்ளது. இந்த ஆண்டுக்கான (2022) துணைக் கருப்பொருள், "Act Local to Go Global" என்பதாக உள்ளது.

**9. வடகிழக்கிந்தியாவின் முதல், 'மீன் அருங்காட்சியகம்' அமைக்கப்படவுள்ள மாநிலம் எது?**

அ. அஸ்ஸாம்

ஆ. சிக்கிம்

**இ. அருணாச்சல பிரதேசம் ☑**

ஈ. மேகாலயா



✓ வடகிழக்கிந்தியாவின் முதலாவது 'மீன் அருங்காட்சியகம்' அருணாச்சல பிரதேச மாநிலத்தில் அமைக்கப்படவுள்ளது. அருணாச்சல பிரதேச மாநிலத்தில் தற்போதுள்ள டாரின் மீன் பண்ணையானது ஒருங்கிணைந்த நீர்மப் பூங்காவாக மேம்படுத்தப்படும்; அந்தப் பூங்காவில் அருங்காட்சியகம் அமைக்கப்படும். பிரதம மந்திரி மத்ஸ்ய சம்பத் யோஜனாவின் (PMMSY) கீழ் ஒவ்வொரு மாநிலத்திற்கும் யூனியன் பிரதேசத்திற்கும் ஓர் ஒருங்கிணைந்த நீர்மப் பூங்கா அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

**10. 'இந்தியாவின் எஃகு மனிதர்' என்று அழைக்கப்படுபவர் யார்?**

அ. O P ஜிண்டால்

ஆ. சர்தார் வல்லபாய் படேல்

**இ. ஜாம்ஷெட் J இரானி ☑**

ஈ. இலக்ஷ்மி மிட்டல்



✓ 'இந்தியாவின் எஃகு மனிதர்' என்று அழைக்கப்படும் ஜாம்ஷெட் J இரானி, சமீபத்தில் ஜாம்ஷெட்பூரில் தனது 86ஆம் வயதில் காலமானார். டாடா எஃகு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக 1992இல் அவர் பணியேற்றார். 2001இல் அவர் ஓய்வுற்றார். 43 ஆண்டுகால பணியாற்றலுக்குப் பின் 2011 ஜூன் மாதம் டாடா எஃகு குழுமத்திலிருந்து இரானி ஓய்வுற்றார். தொழிற்துறையில் அவராற்றிய பங்களிப்பிற்காக 2007இல் 'பத்ம பூஷன்' விருது பெற்றார். டாக்டர் இரானி, கடந்த 2008ஆம் ஆண்டில் உலோகவியலில் தனது சேவைகளுக்காக இந்திய அரசாங்கத்தால், 'வாழ்நாள் சாதனையாளர்' விருதைப் பெற்றார்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 18-11-2022: 'கப்பலோட்டிய தமிழன்' வ உ சிதம்பரனார் அவர்களின் 86ஆவது நினைவுநாள்.**

---

**2. ஓட்டுநர் இல்லா மெட்ரோ இரயில்கள்: ₹946 கோடி ஒப்பந்தம்**

ஓட்டுநர் இல்லாத மெட்ரோ இரயில்களை உருவாக்க ₹946.92 கோடியில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் 2ஆவது கட்டத்தின்கீழ் ஓட்டுநர் இல்லாமல், இயக்கப்படும் மூன்று பெட்டிகள் கொண்ட இருப்பத்தாறு மெட்ரோ இரயில்களை உருவாக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து அல்ஸ்டோம் டிரான்ஸ்போர்ட் இந்தியா நிறுவனத்துக்கு ₹946 கோடியே 92 லட்சம் மதிப்பில் பணி வழங்கப்பட்டுள்ளது.

---

**3. தமிழக பிற்படுத்தப்பட்டோர் ஆணையத் தலைவராக நீதிபதி பாரதிதாசன் நியமனம்!**

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவராக ஓய்வு பெற்ற நீதிபதி பாரதிதாசனை நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

---

**1. கீழ்க்காணும் எந்த நாட்டுடன் இணைந்து, 'இளம் வல்லுநர்கள் திட்டத்தை' இந்தியா அறிவிக்கவுள்ளது?**



அ. ஜப்பான்

ஆ. தென் கொரியா

**இ. இங்கிலாந்து ☑**

ஈ. அமெரிக்கா

✓ இந்தியாவும் இங்கிலாந்தும் (UK) புதிய பரஸ்பர விசா ஏற்பாட்டை அறிவிக்கவுள்ளன. இதன்மூலம் 18 முதல் 30 வயதுக்குட்பட்ட 3,000 பட்டம்பெற்ற இந்திய நாட்டுக் குடிமக்கள் ஒவ்வோர் ஆண்டும் பிரிட்டனுக்கு வந்து இரண்டு ஆண்டுகள் வரை வாழவும் பணியாற்றவும் அனுமதிக்கப்படுவர். UK–இந்தியா இளம் தொழில் வல்லுநர்கள் திட்டம் ஆனது 2023ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பரஸ்பரம் அறிவிக்கப்படும். பாலியில் நடைபெறும் G20 உச்சிமாநாட்டின் இறுதியில் பிரதமர் நரேந்திர மோதி மற்றும் பிரிட்டிஷ் பிரதமர் ரிஷி சுனக் இடையேயான முதல் இருதரப்பு சந்திப்பின் போது இது தொடங்கப்படவுள்ளது. இத்தகைய திட்டத்தால் பயன்பெறும் முதல் நாடு இந்தியா ஆகும்.

**2. 'திருமணத்திற்கான மரியாதை சட்டத்துடன்' தொடர்புடைய நாடு எது?**



அ. ஜெர்மனி

**ஆ. அமெரிக்கா ☑**

இ. இங்கிலாந்து

ஈ. பிரான்ஸ்

✓ அமெரிக்க சட்டப்பேரவை, ஒரே பாலின மற்றும் கலப்பினங்களுக்கிடையேயான திருமணங்களுக்கு அமெரிக்க கூட்டரசு பாதுகாப்பை அளிக்கும், 'திருமணத்திற்கான மரியாதை சட்டத்தை' முன்வைத்தது. 'திருமணத்திற்கான மரியாதை சட்டம்' முந்தைய திருமணப் பாதுகாப்புச் சட்டத்தை இரத்து செய்கிறது. மேலும் பாலினம், இனம், இனக் குழு அல்லது தேசிய வம்சாவளியைப் பொருட்படுத்தாமல், செல்லுபடியாகும் திருமணங்களை அங்கீகரிப்பதன்மூலம் ஒரே பாலின மற்றும் கலப்பினங்களுக்கு இடையிலான திருமணத்தைக் காக்கின்றது.

**3. டோனி போலோ வானூர்தி நிலையம் திறக்கப்பட்ட மாநிலம்/ யூனியன் பிரதேசம் எது?**




அ. சிக்கிம்

**ஆ. அருணாச்சல பிரதேசம் ☑**

இ. மேற்கு வங்காளம்

ஈ. ஜார்கண்ட்

✓ அருணாச்சல பிரதேச மாநிலத்தில் முதல் கிரீன்ஃபீல்ட் வானூர்தி நிலையத்தை பிரதமர் நரேந்திர மோதி திறந்து வைத்தார். அது இட்டாநகரின் ஹோலாங்கியில் உள்ள டோனி போலோ வானூர்தி நிலையமாகும். அவ்வானூர்தி நிலையத்திற்கான அடிக்கல்லை கடந்த 2019 பிப்ரவரியில் பிரதமர் நாட்டினார். டோனி போலோ விமான நிலையம் அருணாச்சல பிரதேசத்தில் மூன்றாவது வானூர்தி நிலையமாக இருக்கும். இது வடகிழக்குப் பிராந்தியத்தில் உள்ள மொத்த வானூர்தி நிலையங்களின் எண்ணிக்கையை 16ஆக உயர்த்தும்.

**4. C V ஆனந்த போஸ் என்பவர் கீழ்க்காணும் எந்த மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்?**



அ. தமிழ்நாடு

ஆ. ஆந்திரப் பிரதேசம்

இ. கேரளம்

**ஈ. மேற்கு வங்காளம் ☑**

✓ மேற்கு வங்க மாநிலத்தின் புதிய ஆளுநராக டாக்டர் C V ஆனந்த போஸ் நியமிக்கப்பட்டார். குடியரசுத் தலைவர் மாளிகையின் அறிவிப்புமூலம் இந்த நியமனம் அறிவிக்கப்பட்டது. தேசிய ஜனநாயகக் கூட்டணியின் இந்தியத் துணைக்குடியரசுத்தலைவர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டதை அடுத்து ஏற்கெனவே மேற்கு வங்க மாநிலத்தின் ஆளுநராக பதவி வகித்த ஜக்தீப் தன்கர் பதவி விலகினார். அதன் பின்னர் அப்பொறுப்பை மணிப்பூர் மாநில ஆளுநர் இல கணேசன் கூடுதலாக கவனித்து வந்தார்.

### 5. 2022இல் வடகிழக்கு ஒலிம்பிக் போட்டிகளின் இரண்டாவது பதிப்பை நடத்திய மாநிலம் எது?

அ. அஸ்ஸாம்

**ஆ. மேகாலயா ☑**

இ. மணிப்பூர்

ஈ. சிக்கிம்

✓ வடகிழக்கு ஒலிம்பிக் போட்டிகளின் இரண்டாவது பதிப்பு மேகாலயாவின் ஷில்லாங்கில் நடத்தப்பட்டது. மணிப்பூர் மொத்தம் 240 பதக்கங்களுடன் ஒட்டுமொத்த அணி சாம்பியனாக உருவெடுத்தது. மொத்தம் 203 பதக்கங்களுடன் அஸ்ஸாம் இரண்டாவது இடத்தையும், அருணாச்சல பிரதேசம் மூன்றாவது இடத்தையும் பிடித்தது. ஒருவாரகாலம் நிகழ்ந்த இந்த நிகழ்வில், வடகிழக்கு மாநிலங்களைச் சார்ந்த சுமார் 3000 பங்கேற்பாளர்கள் 18 பிரிவுகளில் போட்டியிட்டனர். வடகிழக்கு ஒலிம்பிக் போட்டிகளின் அடுத்த பதிப்பை நாகாலாந்து மாநிலம் நடத்தவுள்ளது.

### 6. 'இன்வெஸ்ட் கர்நாடகா – 2022' உச்சிமாநாட்டின் கருப்பொருள் என்ன?

**அ. Build for the World ☑**

ஆ. Global Supply Chain

இ. Tradition and Technology


ஈ. Nature and Culture

✓ 'இன்வெஸ்ட் கர்நாடகா – 2022' உச்சிமாநாட்டின் தொடக்க விழாவில் பிரதமர் நரேந்திர மோதி உரையாற்றினார். கர்நாடகாவின் உலகளாவிய முதலீட்டாளர்கள் சந்திப்பின் இந்த ஆண்டு பதிப்பு, 'உலகத்திற்காக உருவாக்குங்கள்' என்ற கருப்பொருளின்கீழ் நடத்தப்பட்டுள்ளது. மூன்று நாள் நடந்த இந்த நிகழ்ச்சியில் 80–க்கும் மேற்பட்ட அமர்வுகள் இருக்கும். கூட்டாளர் நாடுகளான பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லாந்து, தென் கொரியா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளால் அமர்வுகள் நடத்தப்படுகின்றன.

### 7. நீர்வள மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் துறையில் ஒத்துழைப்பு குறித்து கீழ்க்காணும் எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், இந்தியா கையெழுத்திட்டது?

அ. பின்லாந்து

**ஆ. டென்மார்க் ☑**



இ. ஆஸ்திரியா

ஈ. ஆஸ்திரேலியா

✓ நீர்வள மேம்பாடு மற்றும் நீர்மேலாண்மைத் துறையில் இந்தியா மற்றும் டென்மார்க் இடையேயான ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு நடுவண் அமைச்சரவை ஒப்புதலளித்துள்ளது. பசுமை செயல்திட்ட கூட்டாண்மையை நிறுவுவது குறித்து இருநாடுகளும் ஒரு கூட்டு அறிக்கையை வெளியிட்டன. வாரணாசியில் திறன்மிகு நீர்வள மேலாண்மைக்கான சிறப்பு மையமும் தூய ஆற்றுநீர் குறித்த ஸ்மார்ட் ஆய்வகமும் நிறுவுதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**8. இந்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனமானது கால்நடைகளுக்கான எந்த மருந்தைப் பயன்படுத்த தடை விதிக்க கோரியுள்ளது?**

அ. அசெக்ளோஃபெனாக் ☑

ஆ. புரோஜெஸ்டின்

இ. எரித்ரோமைசின்

ஈ. கொலிஸ்டின்




✓ இந்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனமானது கால்நடைகளில் அசிக்ளோஃபெனாக் பயன்படுத்துவதைத் தடை செய்யக் கோரியுள்ளது. இந்த மருந்து நீர் எருமைகள் மற்றும் பசுக்களில், 'டிக்ளோஃபெனாக்' ஆக வளர்சிதை மாற்றமடைகிறது என்று ஒரு புதிய ஆராய்ச்சி கண்டறிந்த பின்னர் இந்த அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய வளர்சிதை மாற்றங்கள் நாட்டில் உள்ள கழுகுகளுக்கு அச்சுறுத்தலாக உள்ளன. டிக்ளோஃபெனாக், ஓர் அழற்சி எதிர்ப்பு மருந்தாகும். கழுகுகளின் எண்ணிக்கை குறைந்ததையடுத்து கடந்த 2006ஆம் ஆண்டில் இந்திய அரசால் கால்நடை மருத்துவப் பயன்பாட்டிற்கு அம்மருந்து தடை செய்யப்பட்டது.

**9. ஒரு புதிய ஆய்வின்படி, கீழ்க்காணும் எந்த உயிரினம் நாள்தோறும் சுமார் பத்து மில்லியன் நுண் நெகிழித் துண்டுகளை விழுங்கக்கூடும்?**

அ. ஆமை

**ஆ. நீலத்திமிங்கலம் ☑**

இ. கால்நடைகள்

ஈ. தவளை



✓ ஒரு புதிய ஆய்வின்படி, நீலத்திமிங்கலங்கள் தினமும் சுமார் 10 மில்லியன் மைக்ரோ பிளாஸ்டிக் துண்டுகள் அல்லது சுமார் 95 பவுண்டுகள் (43.5 கிலோ) பிளாஸ்டிக்கை விழுங்கக்கூடும். இறால் உண்ணும் திமிங்கலங்கள் தினமும் சுமார் 4 மில்லியன் மைக்ரோபிளாஸ்டிக் துண்டுகளை (38 பவுண்டுகள் பிளாஸ்டிக் வரை) உட்கொள்ளலாம்; அதே வேளையில் மீனுண்ணும் திமிங்கலங்கள் சுமார் 200,000 துண்டுகளை (இரண்டு பவுண்டுகள் பிளாஸ்டிக் வரை) உட்கொள்ளலாம்.

**10. சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாளில், 'ஒற்றுமை ஓட்டங்களை' ஏற்பாடு செய்த நடுவண் அமைச்சகம் எது?**

அ. இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம் ☑

ஆ. கல்வி அமைச்சகம்

இ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

युवा कार्यक्रम
एवं खेल मंत्रालय
MINISTRY OF
YOUTH AFFAIRS
AND SPORTS
सत्यमेव जयते

✓ நடுவண் இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் அதன் துணை அமைப்புகளான நேரு யுவ கேந்திரா சங்கதன் மற்றும் தேசிய சேவைத் திட்டம் (NSS) ஆகியவை சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாளை முன்னிட்டு அனைத்து மாவட்டங்களிலும் 'ஒற்றுமை ஓட்டங்களை' நடத்தின. பஞ்சாப் மாநிலம் மொகாலியில் இருந்து ஒற்றுமைக்கான ஓட்டத்தை நடுவண் இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் கொடியசைத்து தொடங்கிவைத்தார். நாடு முழுவதும், 55.32 லட்சம் பங்கேற்புடன், 90,122 ஒற்றுமைக்கான ஓட்டங்கள், தேசிய ஒற்றுமையின் சாராம்சம் குறித்து குடிமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கோடு ஏற்பாடு செய்யப்பட்டன.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 'நூலக நண்பர்கள்' திட்டம் டிச.1இல் தொடக்கம்**

தமிழக அரசின் நூலக நண்பர்கள் திட்டம் சென்னையில் டிச.1ஆம் தேதி முதல் செயல்படுத்தப்படவுள்ளது. நூலக வாசகர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையிலும், நூலகங்களுக்கு வர முடியாத மாற்றுத் திறனாளிகள், முதியவர்கள் உள்ளிட்டோர், வீடுகளில் இருந்தே நூல்களை வாசிக்க உதவும் வகையில் 'நூலக நண்பர்கள்' திட்டத்தை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இதையடுத்து மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு நூலகங்களிலும் தலா ஐந்து தன்னார்வலர்கள் கட்டணமின்றி உறுப்பினர்களாக சேர்க்கப்படுவர்.

அவர்களுக்கு புத்தகங்கள் எடுத்துச்செல்ல பை, அடையாள அட்டை வழங்கப்படும். இதையடுத்து அவர்கள் இல்லங்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பொது இடங்களுக்குச் சென்று புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதுடன் அவர்கள் விரும்பும் நூல்களை வழங்குவர்.

---

**2. தேர்தல் ஆணையராக அருண் கோயல் நியமனம்**

ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி அருண் கோயல், தேர்தல் ஆணையராக நியமனம் செய்யப்பட்டார். அரசு செய்திக் குறிப்பில் இதுதொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

1985ஆம் ஆண்டு பஞ்சாப் பிரிவு ஐஏஎஸ் அதிகாரியான இவர், தலைமைத் தேர்தல் ஆணையர் இராஜீவ் குமார், தேர்தல் ஆணையர் அனுப்சந்திர பாண்டே ஆகியோருடன் தேர்தல் ஆணைய குழுவில் இடம்பெறுவார். தலைமைத் தேர்தல் ஆணையர் இராஜீவ் குமார் வரும் 2025–ஆம் ஆண்டு பிப்ரவரியில் பணி ஓய்வு பெற்ற பின்னர், அடுத்த தலைமைத் தேர்தல் ஆணையராக அருண் கோயல் பொறுப்பேற்பார். பின்னர், 2027–ஆம் ஆண்டு டிசம்பரில் 65 வயதை எட்டும்போது அந்தப் பதவியிலிருந்து கோயல் ஓய்வு பெறுவார்.

---

**3. தலாய் லாமாவுக்கு காந்தி – மண்டேலா விருது**

திபெத்திய பௌத்த மத குரு தலாய் லாமாவுக்கு காந்தி– மண்டேலா விருதை ஹிமாசல பிரதேச ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் வழங்கி கௌரவித்தார். அமைதி, நல்லிணக்கம், விடுதலையை முன்னெடுக்கும் சர்வதேச தலைவர்களுக்கு தர்மசாலாவில் செயல்பட்டு வரும் காந்தி மண்டேலா அறக்கட்டளை சார்பில் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.


---

**4. அரசுப்பள்ளிகளில், 'மிஷன் இயற்கை': வழிகாட்டுதல்கள் வெளியீடு**

தமிழக அரசுப்பள்ளிகளில், 'மிஷன் இயற்கை' என்ற பெயரிலான சுற்றுச்சூழல் திட்டத்தை செயல்படுத்த பள்ளிக் கல்வித்துறை திட்டமிட்டுள்ள நிலையில் அது குறித்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதுகுறித்து பள்ளிக்கல்வி ஆணையர் அனுப்பிய சுற்றறிக்கை: தனியார் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து 'மிஷன் இயற்கை' என்ற சுற்றுச்சூழல் திட்டத்தை அரசுப்பள்ளிகளில் செயல்படுத்த பள்ளிக்கல்வித்துறை திட்டம் தீட்டியுள்ளது.

---

**1. அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற, 'ஆர்டெமிசினின்' என்பது கீழ்க்காணும் எந்த நோய்க்கெதிரான மருந்துகளின் முக்கிய கூறாக அமைந்துள்ளது?**



அ. நீரிழிவு நோய்

**ஆ. மலேரியா ☑**

இ. சார்ஸ்

ஈ. உயர் இரத்த அழுத்தம்

✓ உலக நுண்ணுயிர்க்கொல்லி குறித்த விழிப்புணர்வு வாரத்தின்போது, ஆப்பிரிக்காவில் மலேரியா எதிர்ப்பு மருந்து எதிர்ப்பை எதிர்த்து உலக நலவாழ்வு நிறுவனம் ஒரு புதிய உத்தியை அறிமுகம் செய்தது. நுண்ணுயிர்க்கொல்லி எதிர்ப்பின் காரணமாக அதிகரித்து வரும் அச்சுறுத்தலைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான இந்த வார அனுசரிப்பு, ஆண்டுதோறும் உலகளாவிய பிரச்சாரமாக நடத்தப்படுகிறது. சில ஒட்டுண்ணிகள் மலேரியாவுக்கான மருந்துகளின் முதன்மை கூறாக விளங்கும் ஆர்ட்டெமிசினினுடன் கூடிய மருந்துகளை எதிர்க்கும் ஆற்றலைக் கொண்டுள்ளதாக உலக நலவாழ்வு நிறுவனம் எச்சரித்துள்ளது.

**2. 'ஹ்வாசாங்-17' அல்லது மான்ஸ்டர் ஏவுகணையை ஏவிய நாடு எது?**



அ. ஜெர்மனி

**ஆ. வட கொரியா ☑**

இ. இங்கிலாந்து

ஈ. பிரான்ஸ்

✓ வட கொரியா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையான, 'ஹ்வாசாங்-17'ஐ அண்மையில் ஏவியது. இது 'மான்ஸ்டர் ஏவுகணை' என்றும் அழைக்கப்படுகிறது. 'Hwasong-17' ஏவுகணையானது வடகொரியாவின் மிகப் பெரிய ஏவுகணையாகும். இது திரவ எரிபொருள்மூலம் இயங்கும், கண்டம் விட்டு கண்டம் பாயும் உலகின் மிகப் பெரிய ஏவுகணையாகும்.

**3. 2022 – உலக குழந்தைகள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**




**அ. Inclusion, For Every Child ☑**

ஆ. Children's Rights

இ. International togetherness

ஈ. Digital Access for all

✓ சர்வதேச ஒற்றுமை, உலகெங்கிலும் உள்ள குழந்தைகளிடையே விழிப்புணர்வு மற்றும் குழந்தைகளின் நலனை மேம்படுத்துவதற்காக நவ.20 அன்று, 'உலக குழந்தைகள் நாள்' கொண்டாடப்படுகிறது. இது முதன்முதலில் 1954 இல் உலகளாவிய குழந்தைகள் நாளாக நிறுவப்பட்டது. ஐநா பொதுச்சபை குழந்தைகளின் உரிமைகள் பற்றிய பிரகடனம் மற்றும் மாநாடு இரண்டையும் ஏற்றுக்கொண்ட தேதியின் ஆண்டு நிறைவையும் இந்த நாள் குறிக்கிறது. இந்த ஆண்டு, "Inclusion, For Every Child" என்பது இந்த நாளுக்கானக் கருப்பொருளாக உள்ளது.

**4. அண்மையில் திறக்கப்பட்ட கமெங் நீர் மின்னுற்பத்தி நிலையம் அமைந்துள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**



அ. தமிழ்நாடு

ஆ. ஆந்திர பிரதேசம்

இ. கேரளம்

**ஈ. அருணாச்சல பிரதேசம் ☑**

✓ அருணாச்சல பிரதேச மாநிலத்தில் 600 மெகாவாட் (MW) உற்பத்தித் திறன்கொண்ட கமெங் நீர்மின்னுற்பத்தி நிலையத்தை பிரதமர் நரேந்திர மோதி திறந்து வைத்தார். எரிசக்தி அமைச்சகத்தின்கீழ் உள்ள 'மினி இரத்னா' மின் உற்பத்தி பொதுத்துறை நிறுவனமான, 'NEEPCO' லிமிடெட் மூலம் செயல்படுத்தப்படும் மிகப்பெரிய நீர் மின்னுற்பத்தி திட்டம் இதுவாகும். இது வடகிழக்கில் அமைந்துள்ள ஆறாவது நீர் மின்னுற்பத்தி நிலையமாகும். இந்தத் திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் 3353 மில்லியன் அலகுகளை உற்பத்தி செய்வது அருணாச்சல பிரதேச மாநிலத்தை மின் மிகை மாநிலமாக மாற்றும். இந்த மின்னுற்பத்தி தேசிய கட்டத்திற்கும் பங்களிக்கும்.

**5. 2021–22 இந்திய மாநிலங்கள் குறித்த புள்ளிவிவரங்களின் கையேட்டை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ. SEBI

**ஆ. இந்திய ரிசர்வ் வங்கி ☑**

இ. NITI ஆயோக்

ஈ. பொருளாதார விவகாரங்கள் துறை

✓ இந்திய ரிசர்வ் வங்கி தனது புள்ளிவிவர வெளியீட்டின் ஏழாவது பதிப்பை, "இந்திய மாநிலங்கள் குறித்த கையேடு 2021–22" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2022–23இல் சுமார் 7% இருக்கும். இது இந்த நிதியாண்டின் ஜூன்–செப்டம்பர் காலாண்டில் 6.1% முதல் 6.3% வரை வளர்ச்சி விகிதத்தை பதிவுசெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இக்கையேட்டின் சமீபத்திய பதிப்பில், சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் என்ற இரண்டு புதிய பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**6. கல்வி அமைச்சகத்தின் செயல்திறன் தரவரிசைக் குறியீட்டின்படி, 2020–21ஆம் ஆண்டில் எத்தனை மாநிலங்கள் நிலை–2 தரத்தை எட்டியுள்ளன?**

அ. ஒன்றுமில்லை

ஆ. இரண்டு

இ. நான்கு

**ஈ. ஏழு ☑**

✓ 2020–21ஆம் ஆண்டிற்கான மாநிலங்கள் & யூனியன் பிரதேசங்களுக்கான செயல்திறன் தரவரிசை குறியீட்டை நடுவண் கல்வியமைச்சகம் வெளியிட்டுள்ளது. மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள பள்ளிக்கல்வி முறைகளின் ஆதார அடிப்படையிலான விரிவான பகுப்பாய்வை இந்தக் குறியீடு கொண்டுள்ளது. கேரளம், பஞ்சாப், சண்டிகர், மகாராஷ்டிரா, குஜராத், இராஜஸ்தான் மற்றும் ஆந்திர பிரதேசம் என மொத்தம் ஏழு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் 2020–21இல் நிலை–2 என்ற தரத்தை எட்டியுள்ளன. PGI 2020–21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை பத்துத்தரங்களாக வகைப்படுத்தியுள்ளது; அதில் ஒரு மாநிலமோ அல்லது யூனியன் பிரதேசமோ அதிகபட்சமாக அடையக்கூடிய தரம் 'நிலை–1' ஆகும்.

**7. ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத் திட்டத்துடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?**

**அ. வேதிகள் மற்றும் உரங்கள் அமைச்சகம் ☑**

ஆ. உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

இ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ. நகர்ப்புற மற்றும் வீட்டு விவகாரங்கள் அமைச்சகம்

✓ 2022–23 ரபி பருவத்திற்கான P&K உரங்களுக்கான ஊட்டச்சத்து அடிப்படையிலான மானிய விகிதங்களை பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு அங்கீகரித்துள்ளது. 2022–23ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் பாஸ்பேடிக் மற்றும் பொட்டாசிக் (P&K) உரங்களுக்கு ₹51,875 கோடி மானியம் வழங்க அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. நடுவண் வேதிகள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தால் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. உர

உற்பத்தியாளர்கள்/இறக்குமதியாளர்கள்மூலம் மானிய விலையில் உழவர்களுக்கு உரங்களை இந்திய அரசாங்கம் கிடைக்கச் செய்கிறது.

**8. 'நகர்ப்புற போக்குவரவு இந்தியா மாநாடு மற்றும் கண்காட்சி – 2022' நடத்தப்படுகிற மாநிலம் எது?**



அ. தமிழ்நாடு

**ஆ. கேரளா ☑**

இ. கர்நாடகா

ஈ. மகாராஷ்டிரா

✓ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது கேரள மாநில அரசுடன் இணைந்து கொச்சியில் 15ஆவது நகர்ப்புற போக்குவரவு இந்தியா மாநாடு மற்றும் கண்காட்சி – 2022 ஆகியவற்றை ஏற்பாடு செய்துள்ளது. சர்வதேச அளவில் நடைமுறையில் உள்ள நவீன மற்றும் சிறந்த நகர்ப்புற போக்குவரத்து நடைமுறைகள் குறித்து அதிகாரிகள் தெரிந்து கொள்வதற்காகவே இந்த கருத்தரங்கு நடத்தப்படுகிறது. நடுவண் மற்றும் மாநில அரசுகளின் மூத்த அதிகாரிகள், கொள்கை வடிவமைப்பாளர்கள், மெட்ரோ இரயில் நிறுவனங்களின் மேலாண் இயக்குநர்கள், போக்குவரத்து நிறுவனங்களின் தலைமை நிர்வாகிகள், பன்னாட்டு வல்லுநர்கள், தொழிற்துறை வல்லுநர்கள், கல்வியாளர்கள், மாணவர்கள் முதலியவர்கள் இதில் கலந்துகொள்வார்கள்.

**9. அமெரிக்க செய்திகள் மற்றும் உலக அறிக்கையின்படி, மலிவான உற்பத்தி செலவைக் கொண்டுள்ள நாடு எது?**



**அ. இந்தியா ☑**

ஆ. வங்காளதேசம்

இ. சீனா

ஈ. இந்தோனேசியா

✓ அமெரிக்க செய்திகள் மற்றும் உலக அறிக்கையின்படி, 85 நாடுகளில், சீனா மற்றும் வியட்நாமை விஞ்சி மலிவான உற்பத்தி செலவைக்கொண்ட நாடாக இந்தியா தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த சிறந்த நாடுகளின் தர வரிசையில் இந்தியா 31ஆம் இடத்தைப்பிடித்துள்ளது; அதே வேளையில், 'வணிகத்திற்கான திறந்த' பிரிவில் 37ஆம் இடத்தைப்பிடித்தது. ஒட்டுமொத்த சிறந்த நாடுகளின் தரவரிசையில், சுவிச்சர்லாந்து முதலிடத்திலும், ஜெர்மனி, கனடா, அமெரிக்கா மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.

**10. இந்தியா, எந்த மாதத்தில், 'கங்கா உத்சவத்தை'க் கொண்டாடவுள்ளது?**




அ. அக்டோபர்

**ஆ. நவம்பர் ☑**

இ. டிசம்பர்

ஈ. ஏப்ரல்

✓ இந்திய அரசு இந்த ஆண்டு நவ.1–3 வரை 'கங்கா உத்சவத்தை'க் கொண்டாடவுள்ளது. கங்கையாற்றுக்குப் புத்துயிர் அளிப்பதில் பங்கேற்பாளர்களின் ஈடுபாடு & பொதுமக்கள் பங்கேற்பை ஊக்குவிப்பதில் இது கவனஞ்செலுத்துகிறது. தூய்மையான கங்கைக்கான தேசிய இயக்கத்தின்படி, தேசிய மற்றும் மாநில அளவில் வடிவமைக்கப்பட்ட பல்வேறு செயல்பாடுகள், நேரடி முறை மற்றும் மெய்நிகர் முறையில் ஏற்பாடு செய்யப்படும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கம்போடியாவில் இந்தியா–ஆசியான்பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாடு: இராஜ்நாத் சிங் நவ.22இல் பயணம்**

இந்தியா–ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக, பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் கம்போடியாவுக்கு 2 நாள் பயணமாக நவ.22–இல் செல்லவிருக்கிறார்.

கம்போடியாவின் துணைப்பிரதமரும், பாதுகாப்பு அமைச்சருமான சாம்டெக் பிச்சே சேனாவின் அழைப்பின் பேரில், இராஜ்நாத் சிங் செல்லவுள்ளார். ஆசியான் அமைப்பில் பேச்சுவார்த்தைரீதியிலான கூட்டுறவு நாடாக 1992இல் இந்தியா சேர்ந்தது. ஆசியான்+ நாடுகளின் மாநாடு மற்றும் இந்தியா–ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாடு தவிர, பல்வேறு உறுப்புநாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களுடன் இராஜ்நாத் சிங் இருதரப்பு விவாதங்களை நடத்த உள்ளார். பரஸ்பர பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் இருதரப்புக்கும் நன்மைபயக்கும் உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து இராஜ்நாத் சிங் ஆலோசிக்கவுள்ளார்.

---

**2. குறைந்த எடை குழந்தைகள்! பாதிப்புகளும்... பாதுகாப்பும்...**

ஆண்டுதோறும் நவ.15–21ஆம் தேதி வரை பச்சிளங்குழந்தைகள் பாதுகாப்பு வாரமாக கடைப்பிடிக்கப்படுகிறது. கடந்த ஆண்டைப் பொருத்தவரை சராசரி அளவைவிடக் குறைவான எடையுடன் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் அதிகரித்துள்ளது.

குறைப்பிரசவம் மற்றும் மிகக்குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு உடல் உறுப்புகளின் செயல்திறன் குறையும் என்றும் இரத்தநோய்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் என்றும் எச்சரிக்கின்றனர் மருத்துவர்கள்.

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் பிறக்கும் குழந்தைகள் – 12 இலட்சம்

சராசரி எடை – 2.5 கிலோ முதல் 3.4 கிலோ வரை

**சராசரி எடையில் பிறந்த குழந்தைகள்**

2018–19 – 87 சதவீதம்

2021–22 – 82 சதவீதம்

**எடை குறைவு பிரசவங்கள்**

100–இல் 13 குழந்தைகள் (2021–22)

100–இல் 8 குழந்தைகள் (2018–19)

குறைந்த எடை குழந்தைகள் விகிதம் – 22 சதவீதம் (2021–22)

**பேறுகாலத்தில் கர்ப்பிணிகளுக்கு நோய்கள் (2021–22)**

இரத்தசோகை – 13%

சர்க்கரை நோய் – 3%

உயர் இரத்த அழுத்தம் – 1%

அதீத உடற்பருமன் – 10%

**எடை குறைவுக்கான காரணங்கள்**

பேறுகால ஊட்டச்சத்துக் குறைபாடு

மருத்துவக்கண்காணிப்பு இல்லாமை

மரபணு பாதிப்புகள்

இரட்டைக்குழந்தைகள் உருவாதல்

தாய்க்கு மனவழுத்தம்

உயர் இரத்த அழுத்தம்

கட்டுப்பாடற்ற சர்க்கரை அளவு

உடற்பயிற்சி இல்லாமை

தேவையற்ற மருந்துகளை உட்கொள்ளுதல்

மது, புகைப்பழக்கம்

சினைப்பை, தொப்புள்கொடி கிருமித்தொற்று

**எடை குறைவு குழந்தைகளுக்கான அச்சுறுத்தல்கள்**

டைப்–1 சர்க்கரை நோய்

கற்றலில் குறைபாடு

நரம்புசார் பாதிப்புகள்

ஹைபாக்சியா (மூச்சுத்திணறல்)

நிமோனியா பாதிப்பு

இரத்தவோட்டத்தில் சுணக்கம்

சிவப்பணுக்கள் அதிகரிப்பு நோய்

**குடற்புழு மருந்துகள்...**

19 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் சிறாருக்கு, 'அல்பெண்டசோல்' எனப்படும் குடற்புழு நீக்க மாத்திரைகள் பள்ளிகளிலோ அல்லது வீடுகளில் நேரடியாகவோ வழங்கப்படுவது வழக்கம். அதன்படி, ஆண்டுக்கு இருமுறை தமிழ்நாட்டில் 8 கோடி, 'அல்பெண்டசோல்' மாத்திரைகள் விநியோகிக்கப்படுகின்றன.

குடற்புழு நீக்க மாத்திரைகள் உட்கொள்ளாதபட்சத்தில் ஊட்டச்சத்துக்குறைபாடு, பசியின்மை, இரத்தசோகை, வயிற்று உபாதைகள், சோர்வுநிலை உள்ளிட்ட பிரச்னைகள் குழந்தைகளுக்கு ஏற்படும்.

**தடுப்பூசி அட்டவணை...**

காலம் – தடுப்பூசிகள்

பிறந்தவுடன் – பிசிஜி (காசநோய்), ஹெபிடைடிஸ் பி (கல்லீரல் தொற்று மற்றும் புற்றுநோய்), ஓபிவி (இளம்பிள்ளை வாதம்)

ஆறு வாரங்கள் – ஓபிவி (இளம்பிள்ளை வாதம்), ஐபிவி (இளம்பிள்ளை வாதம்), பென்டா (கக்குவான் இருமல், இரண ஜன்னி, தொண்டை அடைப்பான், இன்ஃப்ளுயன்ஸா தொற்று, கல்லீரல் தொற்று), பிசிவி (நிமோனியா), ரோட்டா (வயிற்றுப்போக்கு)

10 வாரங்கள் – ஓபிவி, பென்டா, ரோட்டா

14 வாரங்கள் – ஓபிவி, ஐபிவி, பென்டா, பிசிவி, ரோட்டா

9 மாதங்கள் – பிசிவி (பூஸ்டர்), எம் ஆர் (தட்டம்மை மற்றும் ரூபெல்லா நோய்), சப்பானிய மூளைக்காய்ச்சல், விட்டமின் – ஏ

16–24 மாதங்கள் – ஓபிவி, எம் ஆர்., சப்பானிய மூளைக்காய்ச்சல், டிபிடி பூஸ்டர் (கக்குவான் இருமல், தொண்டை அடைப்பான், இரண ஜன்னி)

5–6 வயது – டிபிடி இரண்டாவது பூஸ்டர் தவணை

10 வயது – டெட்டனஸ் (டிடி)

16 வயது – டெட்டனஸ் (டிடி)